**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 192/2018**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : **ஷேக் ரபிக்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (27.04.2026)

A1, A2 present

முதல் விசாரணை

1. நான் தற்போது இலத்துர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இதற்கு முன்பு குற்றாலம் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது 10.03.2018 ம் தேதி காலை 07.30 மணிக்கு நானும், உதவி ஆய்வாளர் தினேஷ்பாபு ஆகியோர்கள் மண் தடுப்பு சம்மந்தமாக ரோந்து பணி செய்து வரும்போது ஹில்டன் பள்ளிக்கு அருகில் அழுதகண்ணீர் ஆற்கு அருகே வந்து சென்றுடிருந்தபோது ஆற்றிற்குள் TN 63 U 8417 என்ற பதிவெண் கொண்ட 735 FE Swarj என்ற டிராக்டர் மற்றும் பதிவெண் இல்லாத டிரெய்லரை ஆற்றினுள் மண் அள்ளிக்கொண்டிருந்தார்கள். போலிஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்பு அவர்களை பற்றி விசாரித்தபோது மடத்துர், வெண்ணியுர் ராமசாமி கோவில் தெருவை சேர்ந்த காளிமுத்து மகன் கதிரவன் அதே ஊரை சேர்ந்த ராமர் நாடார் மகன் ஆத்தியப்பன் என தெரியவந்தது. மேலும் 10.3.2018 ம் தேதி டிராக்டர் மற்றும் டிரெய்லர் , 3 இருமபு சட்டி , ஒரு மண்வெட்டி ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பிக்க பொதுமக்கள் யாரும் முன்வராததால் போலிஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெபத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.1** ஆகும். வழக்கின் சொத்துக்களை 08.30 மணிக்கு நிலையம் கொண்டுவந்து

வழக்கு பதிவு செய்வதற்கு உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இதுசம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அழுதகண்ணீர் ஆற்று அருகே எதிரிகள் யாரையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். எவ்வளவு நேரமாக நானும், உதவி ஆய்வாளரும் விசாரித்து கொண்டிருந்தோம் என்றால் அரை மணிநேமாக விசாரித்தோம். யாரையெல்லாம் விசாரித்தோம் என்றால் அக்கம் பக்கம் உள்ளவர்களை விசாரித்தோம் யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. TN 63 U 8413 யாருடை வண்டி என்று விசாரித்தோம் என்றால் அது கதிரவன் 1வது எதிரியினுடைய வாகனம் ஆகும். அவர் மடத்துர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சட்டி, மண்வெட்டி, டிராக்டர் இதைத்தான் கைப்பற்றினோம் என்றால் சரிதான். 2வது எதிரிக்கு வண்டியை ஓட்டி வந்தாரா அல்லது டிரைவரா என்று குறிப்பிட்டு எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். நாங்கள் போகும்போது வண்டி மட்டும் தான் நின்றது என்றால் சரிதான். அவர்கள் ஓடிவிட்டார்கள். எவ்வளவு தூரம் ஓடினார்கள் அவர்களை பிடிப்பதற்கு முயற்சி எடுத்தோமா என்றால் இல்லை. எங்களை பார்த்தவுடனே ஓடிவிட்டார்கள். நாங்கள் யாரையும் விசாரிக்கவும் இல்லை, அத்தாட்சியில் கையொப்பம் போட வரவில்லை என்று சொல்வது எல்லாம் பொய் என்றால் சரியல்ல. 1வது எதிரி நான் சொல்வது போல் மணல் திருட்டு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விவசாயத்திற்காக வந்த வண்டியை மறித்து பின்யோசனையாக நான், சார்பு ஆய்வாளர் தினேஷ்பாபு ஆகியோர் 1வது எதிரியை கஷ்ட நஷ்ட படுத்த வேண்டும் என்பதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட பொருளுக்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. 1வது எதிரியின் வாகனம் டிராக்டர் என்பதால் அதன் பதிவெண்ணை வைத்துக்கொண்டு அவர் மீது ஒரு பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அத்தாட்சி மற்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-S.Ilayaraja,
Judicial Magistrate, Shenkottai